# சுகாதார அமைச்சு
# அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை - கல்முனை
# 2026/2027 ஆம் ஆண்டில் சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்வி மனுக்கோரல்

அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை சிற்றுண்டிச்சாலையினை 2026/2027 ஆண்டின் ஒரு வருட காலப்பகுதிக்கு நடாத்துவதற்கு திறமையும் தகுதியும் வாய்ந்த கேள்வி மனுத்தாரர்களிடமிருந்து இத்தால் கேள்வி மனுக்கள் கோரப்படுகிறது.

1. ஆர்வமுள்ள கேள்விமனு கோருபவர்கள் கல்முனை அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலிருந்து மீளப்பெறமுடியாத கேள்விக்கட்டணமாக ரூபா 3,000/= ஐ அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன், தேசிய அடையாள அட்டையையும் காண்பித்து கேள்வியில் கலந்து கொள்வதற்கான ஆவணங்களை 06.02.2026 ஆந் திகதி தொடக்கம் 25.02.2026 ஆந் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விக்கான விண்ணப்பதாரிகள் பின்வரும் தகமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
   (அ) இலங்கை சோஷலிச குடியரசின் பிரசையாக இருத்தல் வேண்டும்.
   (ஆ) சிற்றூண்டிச்சாலை / உணவகம் நடத்தியமை தொடர்பான மூன்று (03) வருட அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
   (இ) உணவகம் நடாத்துவதற்கான வியாபாரப்பதிவுச்சான்றிதழ் ஆகக்குறைந்தது ஒரு வருடத்துக்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3. காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**சிற்றுண்டிச்சாலை சேவைகள் வழங்குதல் –2026/2027**" என எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் 25.02.2026 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், பிரதேச கொள்வனவு குழு, அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை கல்முனை** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள "Tender Box" இல் இடப்படல் வேண்டும்.

4. கேள்விமனுக் கோரிக்கைகள் அனைத்தும் 26.02.2026 ஆம் திகதியன்று பகல் 2.30 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வமயம் கோரிக்கை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்க முடியும்.

5. கேள்விமனுக் கோரிக்கை ஆவணங்களை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது அதனை நிராகரிப்பதற்குமான உரிமை கேள்விச் சபைக்குரியது.

6. மேலதிக தகவல்களுக்கு பெறுகை உத்தியோகத்தரை 067-2229496, 067-2222261 EXT 122, 932 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**பிரதேச கொள்வனவு குழு**
**அஷ்ர.்.ப் ஞாபகார்த்த வைத்தியசாலை**
**கல்முனை**